*திரு. பி.வி. கதிரவன்: *பொதுக் கணக்குக் குழுவின் 2013–2014 ஆம் ஆண்டிற்கான 213 முதல் 223 வரையிலான 11 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன. நீங்கள் உட்காருங்கள்.*

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். இவ்வளவு பிடிவாதமாக நீங்கள் நிற்பது சரியல்ல. உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தனைத் திறத்தால், சிறந்த நுண்ணறிவால், தமிழகத்தை உயர்த்திட்ட உலக அரசியல் சிற்பி, இயலாதோர்க்கு ஏணியாய், (மேசையைத் தட்டும் ஒலி) வறுமையில் உழல்பவருக்கு தோணியாய், வல்லரசும் வந்து வாழ்த்தும் வல்லமை கொண்ட ஞானியாய் விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பணிவான வணக்கத்தை பொற்பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்யும் பொன்னான வாய்ப்பை நல்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றிகளை மலர்ப் பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*